## காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2018

பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | |

நேரம்: 2.30 மணி **PART - III - கணக்குப்பதிவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

### பிரிவு - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20×1=20**

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்புநிலைக்குறிப்பு ஈ) பேரேடு

2) வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதைக் கூறும் கருத்து
அ) பண மதிப்பீட்டுக் கருத்து ஆ) அடக்கவிலை கருத்து
இ) வணிகத் தனித்தன்மை கருத்து ஈ) இரட்டைத் தன்மைக் கருத்து

3) இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
அ) இந்திய மையவங்கி ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
இ) உச்சநீதிமன்றம் ஈ) இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம்

4) கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?
அ) இரட்டைத் தன்மை ஆ) நிலைத்தன்மை இ) நிறுவனத்தொடர்ச்சி ஈ) நிகழ்வுத்தன்மை

5) ஒரு நிறுவனத்தின் சொத்துக்களின் மதிப்பு ரூ. 2,00,000/- மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ. 1,20,000/- எனில் அந்நிறுவனத்தின் முதல் ...............
அ) ரூ. 3,20,000/- ஆ) ரூ. 1,20,000/- இ) ரூ. 2,00,000/- ஈ) ரூ. 80,000/-

6) முன்கூட்டி செலுத்திய வாடகை ...............
அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு இ) சொத்துக் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ கணக்கு

7) ஒரு கணக்கில் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள் ...............
அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு இ) இருப்பு இன்மை ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு

8) இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்து கணக்குகள் மட்டும்
இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

9) இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும், வரவுப்பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எழுத வேண்டிய கணக்கு ...............
அ) வியாபார கணக்கு ஆ) வேறுபாட்டு கணக்கு இ) அனாமத்து கணக்கு ஈ) இதர கணக்கு

10) நிலைச்சொத்துக்கள் கடனுககு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஒரு
அ) கொள்முதல் ஏடு ஆ) விற்பனை ஏடு இ) கொள்முதல் திருப்ப ஏடு ஈ) உரிய குறிப்பேடு

11) ரொக்க ஏடு பதிவு செய்வது ...............
அ) அனைத்து ரொக்கப் பெறுதல்கள் ஆ) அனைத்து ரொக்க செலுத்துதல்கள்
இ) (அ) மற்றும் (ஆ) ஆகிய இரண்டும் ஈ) அனைத்து கடன் நடவடிக்கைகள்

12) எந்த செலவிற்கு சில்லரை ரொக்கத்திலிருந்து எடுக்கலாம்?
அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள் ஆ) மேலாளரின் ஊதியம்
இ) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க ஈ) மூலப்பொருட்கள் வாங்க

13) வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு .
இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி ஈ) சில்லரை ரொக்க ஏடு

14) RTGS என்பது ............... குறிக்கிறது.
அ) நிகழ்நேர மொத்த தீர்வகம் ஆ) தேசிய மின்னனு நீதிப் பரிமாற்றம்
இ) கடன அட்டை ஈ) எடுப்பு அட்டை

15) பின்வருவனவற்றுள் எது மாற்றுச்சீட்டுக்குரிய செலுத்துகை நாள், மாற்றுச்சீட்டு நாள் 2017 மார்ச் 1, தவணைக் காலம் 2 மாதம் சலுகை நாள் 3 நாட்கள்
அ) மே 3 ஆ) மே 4 இ) மே 1 ஈ) மே 5

16) உரிய நேரத்தில் விற்பனைத் தொகையை திரும்பப் பெற எவ்வகை தள்ளுபடியை ஒரு வியாபாரி பின்பற்றுகிறார்?
அ) ரொக்க தள்ளுபடி ஆ) கடன் தள்ளுபடி இ) வியாபாரத் தள்ளுபடி ஈ) மேற்கூறிய அனைத்தும்

17) அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ரூ. 1,20,000/- சமன்பாட்டின் நிகழ்வை குறிப்பிடு.
அ) சொத்தின் மதிப்பு உயரும் மற்றும் சொத்தின் மதிப்பு குறையும்
ஆ) சொத்தின் மதிப்பு உயரும் மற்றும் பொறுப்பின் மதிப்பு உயரும்
இ) சொத்தின் மதிப்பு உயரும் மற்றும் பொறுப்பின் மதிப்பு குறையும் ஈ) எதுவும் சரியல்ல

18) 2002 ஜனவரி 1ல் சில்லரை காசாளரிடம் வழங்கியது ரூ. 1,000/- ஜனவரியில் அவர் செலவழித்த தொகை ரூ. 860/- பிப்ரவரி 1ல் அவர் முன்பண மீட்பு முறையில் அவர் பெற வேண்டிய தொகை ...............
அ) ரூ. 1,000/- ஆ) ரூ. 860/- இ) ரூ. 1,860/- ஈ) ரூ. 140/-

19) ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவு கணக்குகளின் சரியான பொருத்தத்தை குறிப்பிடுக.
அ) சந்துரு, கூலி, கட்டடம் ஆ) கட்டடம், சந்துரு, கூலி
இ) சந்துரு, கட்டடம், கூலி ஈ) மேற்கூறிய அனைத்தும்

20) ............ ஆம் ஆண்டில் லூகா பாசியோலி என்ற இத்தாலியர் இரட்டைப்பதிவு கணக்கியல் முறையை மேம்படுத்தினார்?
அ) 1449 ஆ) 1494 இ) 1944 ஈ) 1459

### பிரிவு - II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்: **7×2=14**

அவற்றில் வினா எண். 21-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

21) கணக்கியல் வரையறு.

22) ரொக்க ஏட்டின் வகைகள் யாவை?

23) இடாப்பு என்றால் என்ன?

24) விடுபட்ட பகுதிகளை நிரப்புக:

| | சொத்துகள் ரூ. | பொறுப்புகள் ரூ. | முதல் ரூ. |
|---|---|---|---|
| i) | 30,000 | 20,000 | ? |
| ii) | ? | 25,000 | 30,000 |

25) பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.
(i) முதல் (ii) கட்டடம் (iii) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (iv) தள்ளுபடி பெற்றது

26) குறிப்பேட்டு பதிவுகளை தருக.
(அ) சார்லஸ் தொழில் தொடங்கியது ரூ. 1,00,000/- (ஆ) ஹரியிடமிருந்து பெற வேண்டிய தொகை மின்னனு பணப்பரிமாற்றம் மூலமாக பணம் பெறப்பட்டது ரூ. 50,000/-

27) பின்வரும் நடவடிக்கைகளை 2017 கொள்முதல் ஏட்டில் பதிவு செய்யவும்.

| | | |
|---|---|---|
| ஜனவரி 1 | சுமதியிடம் சரக்கு வாங்கியது | ரூ. 17,800/- |
| ஜனவரி 8 | சரண்யாவிடம் அறைகலன் வாங்கியது | ரூ. 12,200/- |
| ஜனவரி 21 | தேவியிடம் கொள்முதல செய்தது | ரூ. 12,200/- |

28) 2017, மே மாதத்திற்கான கனகசபை அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| மே - 1 | கையிருப்பு ரொக்கம் | ரூ. 40,000/- |
| மே - 5 | ஸ்வாதியிடம் பெற்ற ரொக்கம் | ரூ. 4,000/- |
| மே - 18 | வங்கியில் செலுத்தியது | ரூ. 12,000/- |

29) பின்வரும் பேரேட்டின் இருப்புகளில் எவை பற்று இருப்பு, எவை வரவு இருப்பில் தோன்றும் எனக் காட்டுக.
(அ) ரொக்கம் (ஆ) தள்ளுபடி பெற்றது (இ) நிலம் (ஈ) பற்பல கடனீந்தோர்

30) பின்வரும் நடவடிக்கைகள் எந்த துணை ஏட்டில் பதிவு செய்ய வேண்டும்?
அ) அமுதாவிடம் அறைகலன் வாங்கியது. ஆ) கணேசனிடம் 5 மூட்டை அரிசி வாங்கியது.

## பிரிவு - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×3=21**
**அவற்றில் வினா எண். 31-க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

31) பின்வரும் நடவடிக்கைகளை மனோகர் அவர்களின் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| 2018 மார்ச் 1 | மனோகர் தொழில் தொடங்கியது | ரூ. 60,000 |
| 2018 மார்ச் 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | ரூ. 10,000 |
| 2018 மார்ச் 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | ரூ. 25,000 |
| 2018 மார்ச் 4 | வாடகை செலுத்தியது | ரூ. 500 |

32) கணக்கியலின் பொன்னான விதிகளை எழுதுக.

33) பின்வரும் நடவடிக்கைகளை கணக்கியல் சமன்பாட்டில் பதிவு செய்க.
அ) முருகன் ரூ. 80,000 பணத்துடன் தொழிலை தொடங்கினார்.
ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ. 30,000.
இ) ரொக்கமாக சம்பளம் வழங்கியது ரூ. 5,000.

34) பானு என்பவரது ஏடுகளில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிந்து ரொக்க கணக்கில் எடுத்தெழுதவும்.

| | | |
|---|---|---|
| 2018 செப்டம்பர் 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | ரூ. 90,000 |
| 5 | வாடகை பெற்றது | ரூ. 4,000 |
| 12 | கோபுவிடம் 6 மேஜைகள் ரொக்கத்திற்கு வாங்கியது | ரூ. 6,000 |

35) பின்வரும் இருப்புகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,00,000 | விற்பனை | 1,50,000 |
| வங்கிக்கடன் | 75,000 | கடனீந்தோர் | 50,000 |
| கடனாளி | 1,50,000 | ரொக்கம் | 90,000 |
| சரக்கிருப்பு | 35,000 | முதல் | 1,00,000 |

36) பின்வரும் நடவடிக்கைகளை குகன் என்பவரின் விற்பனை ஏட்டில் பதிவு செய்க.
2017 மே 2 கரண் என்பவருக்கு கடனுக்கு விற்றது.
ஒன்று ரூ. 280 வீதம் 100 துண்டுகள்
மீட்டர் 270 வீதம் 200 மீட்டர் சட்டைத் துணி
மே 5 வீரன் என்பவருக்கு கடனுக்கு விற்றது.
ஒன்று ரூ. 1,500 வீதம் 10 ஆயத்த ஆடைகள்
மே 16 ஜெயின் நிறுவனத்திடம் கடன் விற்பனை செய்தது
ஒன்று ரூ. 240 வீதம் 50 போர்வைகள்
மே 25 சரண் என்பவருக்கு பழைய அறைகலன்களை கடனுக்கு விற்றது ரூ. 18,000

37) 2017 ஜுன் மாதத்திற்கான பாண்டியன் என்பவரின் பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து தனிப்பத்தி ரொக்க ஏட்டினை தயாரிக்கவும்.

| | | |
|---|---|---|
| 2017 ஜுன் 1 | ரொக்கத்துடன் வணிகம் தொடங்கியது | ரூ. 50,000 |
| 8 | வாடகை ரொக்கமாக செலுத்தியது | ரூ. 4,000 |
| 10 | ரொக்கம் செலுத்தி அச்சுப்பொறி வாங்கியது | ரூ. 7,500 |
| 11 | ரொக்கம் கொள்முதல் | ரூ. 15,000 |
| 14 | ரொக்க விற்பனை | ரூ. 10,000 |
| 17 | ரொக்கமாக பெற்ற கழிவு | ரூ. 6,000 |

38) வியாபாரத் தள்ளுபடிக்கும், ரொக்கத் தள்ளுபடிக்கும் வேறுபாடுகள் ஏதேனும் மூன்று தருக.

39) 2018 ஜனவரி 1 அன்று வினோதினி என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன.

| | |
|---|---|
| ரொக்கம் | ரூ. 40,000 |
| சரக்கிருப்பு | ரூ. 50,000 |
| ராணியிடம் பெற வேண்டிய தொகை | ரூ. 20,000 |
| இயந்திரம் | ரூ. 40,000 |
| வாணிக்கு செலுத்த வேண்டிய தொகை | ரூ. 10,000 |

- தொடக்கப்பதிவினை தருக.

40) கீழ்க்காணும் விவரங்களை கொண்டு சைமன் நிறுவனத்தின் 2018 மார்ச் 31 ஆம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயாரிக்கவும்.

அ) வங்கி அறிக்கையின்படி பற்றிருப்பு ரூ. 2,500.
ஆ) செலுத்திய காசோலை இன்னும் வசூலித்து வரவு வைக்கப்படவில்லை ரூ. 10,000.
இ) இணைய வங்கி மூலம் செலுத்திய தொகை ரூ. 2,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

## பிரிவு - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: **7×5=35**

41) அ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டு விளைவுகளை பதிவிட்டு காட்டுக.
அ) இராஜ் ரூ. 40,000 ரொக்கத்துடன் வணிகத்தை தொடங்கினார்.
ஆ) ரூ. 30,000 வைப்புத் தொகையுடன் வங்கியில் கணக்கினை ஆரம்பித்தார்.
இ) ரூ. 20,000 மதிப்பிலான அறைகலன்களை ரொக்கத்திற்கு வாங்கினார்.
ஈ) ரூ. 10,000 மதிப்புள்ள சரக்குகள் ரூ. 15,000-க்கு விற்கப்பட்டது.
உ) வங்கிக் கட்டணம் ரூ. 500.

**(அல்லது)**

ஆ) கீழ்க்கண்ட விவரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பிலிருந்து குறிப்பேட்டுப் பதிவில் விடுபட்ட தொகையினையும் அதன் கணக்குகளையும் கண்டுபிடித்து, முழுமையான குறிப்பேட்டில் எழுதவும்.

| நாள் | விவரம் | பே.ப.எண். | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| 2017 மார்ச் 1 | ........................ | | | ............... |
| | ........................ | | 2,50,000 | |
| | (தொழில் முதல் போட்டது) | | | |
| மார்ச் 3 | ........................ | | ............... | |
| | ........................ | | | 50,000 |
| | (சரக்கு வாங்கியது) | | | |
| மார்ச் 7 | ........................ | | ............... | |
| | ........................ | | | 1,500 |
| | (ஏற்றிச்செல் செலவு செய்தது) | | | |
| மார்ச் 15 | ........................ | | 40,000 | |
| | ........................ | | | ............... |
| | (ராமுக்கு சரக்கு விற்றது) | | | |
| மார்ச் 20 | ........................ | | ............... | |
| | ........................ | | | 30,000 |
| | (கணிப்பொறி வாங்கியது) | | | |

42) அ) பின்வரும் நடவடிக்கைகளை கணேசன் என்பவரது ஏடுகளில் குறிப்பேட்டில் பதிவு செய்து பேரேட்டுக் கணக்குகளிலும் எடுத்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 2017 அக்டோபர் | 1 | தொழில் ரொக்கத்துடன் தொடங்கியது | ரூ. 25,000 |
| | 5 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | ரூ. 12,500 |
| | 10 | அறைகலன் வாங்கி காசோலை கொடுத்தது | ரூ. 2,000 |
| | 15 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | ரூ. 5,000 |
| | 19 | வாசு என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | ரூ. 4,000 |
| | 22 | ரூ. 500/- மதிப்புள்ள சரக்கு சொந்த உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. | |

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை ராஜா ஹோட்டலின் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 2016 ஜனவரி | 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | ரூ. 3,00,000 |
| | 2 | ராஜாவிடமிருந்து கடன் கொள்முதல் செய்தது | ரூ. 1,00,000 |
| | 3 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | ரூ. 20,000 |
| | 20 | வங்கியில் கடன் பெற்றது | ரூ. 1,00,000 |
| | 22 | சொந்த உபயோகத்திற்கு வங்கியில் பணம் எடுத்தது | ரூ. 5,000 |
| | 23 | ராஜாவிற்கு தேசிய மின்னணு பணம் பரிமாற்றம் மூலம் ரொக்கம் செலுத்தி கணக்கு தீர்க்கப்பட்டது. | ரூ. 99,000 |

43) அ) அர்ஜுன் என்பவரது ஏடுகளிலிருந்து 31.03.2018 அன்று எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்க.

| | | | |
|---|---|---|---|
| வங்கி ரொக்கம் | ரூ. 12,500 | பெற்ற தள்ளுபடி | ரூ. 1,675 |
| தொடக்க சரக்கிருப்பு | ரூ. 12,500 | தபால் செலவு | ரூ. 425 |
| காப்பீடு | ரூ. 1,500 | செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | ரூ. 5,600 |
| கொள்முதல் | ரூ. 45,000 | முதல் | ரூ. 20,000 |
| கூலி | ரூ. 1,705 | விற்பனை | ரூ. 58,900 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாக பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| | | | |
|---|---|---|---|
| 2017 ஜுன் | 1 | ராஜா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | ரூ. 50,000 |
| | 6 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | ரூ. 8,000 |
| | 8 | தேவி என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | ரூ. 9,000 |
| | 15 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது | ரூ. 4,000 |
| | 20 | சாந்தி என்பவரிடம் கடனாக சரக்கு வாங்கியது | ரூ. 5,000 |

44) அ) பின்வரும் நடவடிக்கைகளை பொன்னியின் விற்பனை ஏடு மற்றும் விற்பனை திருப்ப ஏட்டில் பதிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 2017 ஆகஸ்ட் | 1 | இடாப்பு எண். 68ன்படி செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது | ரூ. 20,500 |
| | 4 | இடாப்பு எண். 74ன்படி மாதவனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது | ரூ. 12,800 |
| | 7 | இடாப்பு எண். 78ன் படி கனகசபைக்கு கடனுக்கு சரக்கு விற்றது | ரூ. 7,500 |
| | 15 | வரவுக்குறிப்பு 7ன்படி செந்தில் திருப்பிய சரக்கு மதிப்பு ரூ. 1,500க்கு ரொக்கம் அளிக்கப்படவில்லை. | |
| | 20 | செல்வத்திடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | ரூ. 13,300 |
| | 25 | வரவுக்குறிப்பு 11ன்படி மாதவன் திருப்பிய சரக்கு ரூ. 1,800க்கு ரொக்கம் செலுத்தப்படவில்லை. | |

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை மின்சாதனங்களை விற்பனை செய்யும் சுபஸ்ரீ மின்பொருள் நிறுவனத்தின் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| 2017 ஏப்ரல் | 5 | கார்த்திக் மின்பொருள் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது |
| | 10 | மின்தேய்ப்பான் ஒன்று ரூ. 2,500 வீதம் |
| | 15 | மின் அடுப்புகள் ஒன்று ரூ. 2,000 வீதம் |
| | 19 | கேத்தான் மின்பொருளகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது<br>3 மின்சார நீர் சூடேற்றி ஒன்று ரூ. 6,000 வீதம் |
| | 25 | போலார் மின்பொருள் விற்பனையகத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது<br>10 மின்விசிறிகள் ஒன்று ரூ. 2,000 வீதம் |
| | 29 | M. நிறுவனத்திடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது<br>10 மின்சார அடுப்புகள் ஒன்று ரூ. 3,000 வீதம் |

45) அ) கீழ்க்காணும் நடவடிக்கைகளை அகமது என்பவரின் ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 2017 அக்டோபர் | 1 | ரொக்க இருப்பு | ரூ. 37,500 |
| | 3 | ரொக்க விற்பனை | ரூ. 33,000 |
| | 7 | வேலனுக்கு செலுத்திய ரொக்கம் ரூ. 15,850 அவர் அனுமதித்த தள்ளுபடி | ரூ. 150 |
| | 13 | பெருமாள் என்பவருக்கு கடனுக்கு விற்ற சரக்கு | ரூ. 19,200 |
| | 15 | சொந்த செலவுகளுக்கு பணம் எடுத்தது | ரூ. 4,800 |
| | 16 | சுப்ரமணியிடமிருந்து சரக்குகள் கடனுக்கு வாங்கியது | ரூ. 14,300 |
| | 22 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | ரூ 22,700 |
| | 25 | பெருமாளிடம் ரொக்கம் பெற்று அவர் கணக்கைத் தீர்த்து கொண்டது | ரூ. 19,000 |

(அல்லது)

ஆ) ராமச்சந்திரன் என்பவரின் முப்பத்தி ரொக்க பதிவேட்டில் பின்வரும் நடவடிக்கைகளை பதியவும்.

| | | | |
|---|---|---|---|
| 2017 ஜனவரி | 1 | கைரொக்கம் | ரூ. 25,000 |
| | | வங்கி ரொக்கம் | ரூ. 75,000 |
| | 2 | ரொக்கம் வங்கியில் செலுத்தியது | ரூ. 5,000 |
| | 5 | ரொக்கம் செலுத்தி சரக்கு வாங்கியது | ரூ. 5,000 |
| | 10 | மாணிக்கம் என்பவரிடம் ரொக்கம் பெற்றது | ரூ. 9,800 |
| | | அவருக்கு அளித்த தள்ளுபடி | ரூ. 200 |
| | 15 | சரக்கு விற்று ரொக்கம் பெற்றது | ரூ. 8,000 |
| | 17 | ஜானகிக்கு காசோலை மூலம் செலுத்தியது | ரூ. 14,500 |
| | | அவரிடம் பெற்ற தள்ளுபடி | ரூ. 500 |

46) அ) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பணமீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லரை ரொக்க ஏட்டை தயாரிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 2017 ஜூலை | 1 | காசாளரிடம் முன்பணம் பெற்றது | ரூ. 2,000 |
| | 7 | மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது | ரூ. 100 |
| | 8 | வெள்ளைத்தாள் வாங்கியது | ரூ. 50 |
| | 10 | ஆட்டோ ரிக்ஸா கட்டணம் | ரூ. 200 |
| | 15 | கூலி கொடுத்தது | ரூ. 300 |
| | 18 | தபால் செலவுகள் செய்தது | ரூ. 100 |
| | 21 | எழுதுபொருள் வாங்கியது | ரூ. 450 |
| | 23 | தேனீர் செலவு செய்தது | ரூ. 60 |

(அல்லது)

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் டிசம்பர் 31 நாளுக்குரிய வங்கி சரிக்கட்டும் பட்டியலை தயார் செய்க.

அ) ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ. 7,130. ஆ) செலுத்திய காசோலை வசூலாகதது ரூ. 1,000.

இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ரூ. 800.

47) அ) பின்வரும் நடவடிக்கைகளை சுந்தரின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 2017 டிசம்பர் | 1 | தொழில் தொடங்கும் முதலிட்டது | ரூ. 2,00,000 |
| | 2 | X நிறுவனத்திடம் கடனுக்கு நூல்கள் வாங்கியது | ரூ. 80,000 |
| | 4 | வங்கியில் கணக்கு ஆரம்பித்தது | ரூ. 50,000 |
| | 5 | நரேஸ் என்பவருக்கு சரக்குகள் விற்றது<br>அவர் அத்தொகையினை இணைய வங்கி மூலம் செலுத்தினார். | ரூ. 5,000 |
| | 6 | தேவிக்கு சரக்கு விற்றது<br>அத்தொகையினை கடன் அட்டையின் மூலம் செலுத்தினார். | ரூ. 7,000 |
| | 7 | அசிஸ் என்பவருக்கு நூல்கள் கடனுக்கு விற்பனை செய்தது | ரூ. 700 |
| | 8 | அலுவலக தேவைக்காக தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் பணம் எடுத்தது | ரூ. 1,000 |

(அல்லது)

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து காமாட்சி நிறுவனத்தின் 2018 மார்ச் 31ம் நாளன்றைய வங்கி சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.

அ) ரொக்க ஏட்டின்படி பற்றிருப்பு ரூ. 10,500.

ஆ) வங்கியில் செலுத்திய காசோலை ரூ. 5,500 வங்கியால் வரவு வைக்கப்பட்டது ஆனால் ரொக்க ஏட்டில் இருமுறை பதிவு செய்யப்பட்டது.

இ) விடுத்த காசோலை ரூ. 7,000 செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது குறித்த ரொக்க ஏட்டில் பதிவு இல்லை.

ஈ) காசோலை புத்தக கட்டணம் ரூ. 200 வங்கியால் பற்று வைக்கப்பட்டது. ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

***----***